உங்கள் வாழ்க்கையில் என்றோ ஒருநாள் வரும் அந்த மறக்கமுடியாத நிகழ்ச்சிகளை என்றும் உயிரோவியமாக வீடியோ படம்பிடித்திட நாடுங்கள்'
ஸ்ரார் ©
வீடியோ கொம்பிளெக்ஸ்
'ராஜ்-கொற்' தபால்கந்தோரடி
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/=

STAR VIDEO COMPLEX
Any Functions at your Home? Remember this name for VIDEO RECORDING
'RAJ-COT', NEAR POST OFFICE, KONDAVIL EAST, KONDAVIL.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு கார்த்திகை மீ 16உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 18 (01-12-1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:- 5

தமிழ் மக்களின் தாக்கங்கள் இழப்புகளை நேரில் கண்டறியுங்கள்

# ஐக்கிய நாடுகள் சபையே அவதானிப்புக் குழுவை அவசரமாக அனுப்பு!

## இடம்பெயர்ந்தோர் மாநாட்டில் ஏகமனதாக தீர்மானங்கள்

—நல்லூர் செய்தியாளர்: க. இரத்தினராஜசிங்கம்—

நல்லூர், டிச. 1

ஐக்கியநாடுகள் சபை தனது அவதானிப்புக் குழு ஒன்றை அவசரமாக இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு கோரும் தீர்மானம் நேற்று நடந்த இடம் பெயர்ந்தோர் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ் பேசும் மக்களின் இன்றைய அரசியல் நெருக்கடிகளையும் அவற்றினுல் ஏற்படும் தாக்கங்களையும் இழப்புக்களையும் நேரடியாகக் கண்டுகொள்வதற்காக இது மிகவும் அவசியம் என அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

தமிழ் மகளிர் அவை இந்த மாநாட்டை நடத்தியது. நவம்பர் 28, 29, 30ஆம் திகதிகளில் இம் மாநாடு நடைபெற்றது.

தல்நாள் மாநாட்டில் இடம்பெயர்ந்தோர் தங்கள் அவல நிலையைத் தெரிவித்தார்கள்.

இரண்டாம் நாள் மாநாட்டில் அரச அதிகாரிகள் கலந்துகொண்டு பேசினர்.

இறுதிநாள் மாநாட்டில் 24 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

* அரச பயங்கரவாதம் தொடர்வதற்குக் காரணம் இராணுவமும் ஊர்காவல் படையும் செய்யும் அட்டூழியங்களே. ரோந்து நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு இராணுவம் முகாமிற்குள் வைக்கப்பட வேண்டும். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி உலக நாடுகளையும் சர்வதேச நிறுவனங்களையும் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

* ஊர்காவல் படையை அரசாங்கம் உடனே வாபஸ்பெற வேண்டும்.

* இலங்கை இனப் பிரச்சினைக்கு இந்தியா விரைவில் நியாயமான தீர்வு காணவேண்டும். தவறுமானல் இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

* இலங்கையின் ஆளும் உரிமையை பிரிட்டிஷ் அரசே சிங்கள ஆளும் வர்க்கத்திடம் ஒப்படைத்தது. தமிழ் பேசும் மக்களின் உரிமையை வழங்கும்படி ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்திக்கும்படி பிரிட்டிஷ் அரசை, இந்தியாவில்

(4ம்பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோருக்கு சாவகச்சேரியில் தும்புத் தொழிற்சாலை

நல்லூர், டிச. 1

இடம்பெயர்ந்து வந்தோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக சாவகச்சேரியில் தும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க பணம் பொருள் அபிவிருத்திச் சபை முன் வந்துள்ளது.

இத்தகவலை, இடம் பெயர்ந்தோர் மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில் பணம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. நடராஜா வெளியிட்டார்.

சாவகச்சேரியில் கெற்பலி என்னும் இடத்தில் இத்தும்புத் தொழிற்சாலை நிறுவப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

கொழும்பு, மாத்தளை, கம்பளை, பூண்டுலோயா, பசறை, பதுளை, புசல்

(4-ம் பக்கம் பார்க்க)

## காவலில் இருந்த போராளிகள் இருவர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், டிச. 1

கொழும்பு இராணுவத் தலைமை அலுவலகத்தில் காவலில் வைக்கப்பட்டு இருந்த இரண்டு போராளிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சனிக்கிழமை அதிகாலை 4-45 அளவில் இச்சம்பவம் நடந்தது.

இறந்தவர்களின் பெயர்கள் எம். ஏ. ஜுனைதீன், கே. தியாகராசா.

கடந்த ஜூலை மாதத்தில் கிழக்கு மாகாணத்தில் வைத்து இரண்டு பேரும் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைக்காக இராணுவத்தலைமை அலுவலகத்தில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

## கொட்டும் மழையிலும் தேடுதல்

மட்டக்களப்பு, டிச.1

மட்டக்களப்பில் கொட்டும் மழையிலும் நேற்று பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டை நடத்தினர்கள்.

மட்டக்களப்பு புகையிரத நிலையம், கிரான் அரசடி சந்தி உட்பட பல இடங்களில் திடீர் சோதனைகள் நடைபெற்றன.

சுமார் 25 பேர் வரை விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## ரயிலில் கொள்ளையிடப்பட்ட மருந்து திருப்பி ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், டிச. 1

கொள்ளையடிக்கப்பட்ட மருந்துவகைகள் நேற்று சனிக்கிழமை இனந்தெரியாத இளைஞர்களினுல் யாழ். வைத்திய அத்தியட்சகரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இது பற்றிய விவரமாவது:

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் ரயிலில் வந்த மருந்து வகைகள் நவம்பர் 24ஆம் திகதி பளையில் வைத்துக் கொள்ளையடிக்கப்பட்டன.

இந்த மருந்துவகைகளின் பெறுமதி ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபா ஆகும்.

இவையே நேற்று சனிக்கிழமை காலை 9 மணி அளவில் இனந்தெரியாத சில இளைஞர்களால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சுரேந்திரன் நச்சினுர்க்கினியனிடம் நேரில் ஒப்படைக்கப்பட்டன.

இம்மருந்துகளில் 40:000 ரூபா பெறுமதியானவை மட்டும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு ஒதுக்கப்பட்டவை.

ஏனையவை யாழ்குடாநாட்டில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு உரியவை.

மருந்து வகைகளை ஒப்படைத்தமைக்காக வைத்திய அத்தியட்சகர் டாக்டர் நச்சினுர்க்கினியன் இளைஞர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

# இனப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணமுடியாது

## இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது

சென்னை, டிச.1

இனப்பிரச்சினைக்குத் தீர்வு, இராணுவ ரீதியில் கண்டுவிட முடியாது.

இப்படி இந்தியா இலங்கை அரசாங்கத்திற்கு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் குடியிருப்புக்கள், தமிழ் குடிமக்கள் மீது தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ள இச்சமயத்தில் இந்தியா தனதுவலியுறுத்தலைவெளியிட்டது.

தேசிய பாதுகாப்பு அமைச்சரை சந்தித்து இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற், இந்தியாவின் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இராணுவ ரீதியில் தீர்வு கண்டுவிட முடியாது.

இது தான் இந்தியாவின் கணிப்பு—

இப்படி இட்டவட்டமாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியிடம் இந்தியத் தூதர் தெரிவித்துவிட்டார்.

## சாரம் அணிந்தவர் அழைத்தால் இராணுவம் உடனே அழைக்கும்

கிளிநொச்சி, டிச. 1

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ரயிலை ஆனையிறவில் மறித்து ஏறிய இராணுவத்தினர் வெளிநாடு செல்வதற்காக காங்கேசன்துறையிலிருந்து வந்த இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர்.

வெள்ளிக்கிழமை இச்சம்பவம் நடந்தது. திருவையாறைச் சேர்ந்த அப்பாக்குட்டி தியாகலிங்கம் (23 வயது) என்பவரே கைதானவர் ஆவார்.

இராணுவத்தினர் கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு அவரைக் கொண்டு சென்றனர்.

ரயிலில் இராணுவத்தினர், ஏறியபோது அவர்களுடன் வந்த சாரமும் சேர்ட்டும் அணிந்த ஒருவர் இளைஞனைத் தட்டியபோது இராணுவத்தினர் இளைஞனை அழைத்துச் சென்றனராம். (இதுதொடர்பாககிளிநொச்சி பிரசைகள் குழுவிற்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

## வசூல் பணம் அபகரிப்பு

மட்டக்களப்பு, டிச. 1

பதுளை-மட்டக்களப்பு பாதையில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் இரண்டு வழி மறிக்கப்பட்டு கண்டக்டர்களிடமிருந்து வசூல் பணம் கொள்ளையிடப்பட்டது.

நேற்று மரப்பாலம், கோப்பாவெளி ஆகிய இடங்களில் பஸ்ஸை வழி மறித்த ஆயுதபாணிகளே இக்கொள்ளைகளை நடத்திச் சென்றிருக்கிறார்கள்.

## யாழ்ப்பாண பயணிகள் இராணுவ முகாமுக்கு

மட்டக்களப்பு, டிச. 1

கல்முனையில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற பயணிகள் இடைநடுவில் ஆயுதப் படையினரால் வழிமறிக்கப்பட்டு விசாரணைக்காக இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மட்டக்களப்பில் நடைபெற்றது.

நேற்றுக் காலை மட்டக்களப்பில் பஸ் டிப்போவுக்கு அருகில் வைத்து மேற்படி இ. போ. ச. பஸ்ஸை வழிமறித்த ஆயுதப் படையினர் பயணிகள் அனைவரையும் பஸ்ஸைவிட்டு இறக்கி விசாரணைக்காக தம்முடன் அழைத்துச் சென்றனர்.

பிரயாணிகள் இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து அவர்களின் பயணப் பொதிகள் மட்டக்களப்பு பஸ் டிப்போவில் பாதுகாப்புக்காக ஒப்படைக்கப்பட்டன.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களில் மூவரைத் தவிர ஏனையோர் பின்னர் விடுவிக்கப்பட்டதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## சுன்னுகம் மின்சாரசபையில் ரூ. 3000 கொள்ளை

யாழ்ப்பாணம், டிச. 1

சுன்னுகத்தில் உள்ள இலங்கை மின்சார சபை அலுவலகத்தில் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டன.

ஆயுதங்கள் சகிதம் அலுவலகத்துள் புகுந்தவர்கள் அங்கு கடமையிலிருந்த காவலாளியை பயமுறுத்திவிட்டு அங்கிருந்த அலுமினியம் கேபிள், ஸ்குருடைறவர் முதலான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதுபற்றி யாழ். பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## தீவிர தேடுதல்

மட்டக்களப்பு, டிச. 1

செங்கலடியில் நேற்று முன்தினம் கடத்தப்பட்ட பெற்றோல் பவுசரை ஆயுதப் படையினர் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

கடத்தப்பட்ட எரிபொருளின் பெறுமதி 55 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

## முதலில் பண்டாரியுடன் பேச்சு; அதன் பின்பே மாற்று யோசனை

### யு.என். ஐக்கு அமிர் பேட்டி
### நாளை புதுடில்லி புறப்பாடு

சென்னை, டிச. 1

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியுடன் பேசிய பின்னரே, மாற்று யோசனை சமர்ப்பிப்பது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்யும்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் யு. என். ஐ. செய்தி ஸ்தாபனத்திற்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

நாளை 2ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழு திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்து பேச உள்ளது.

இலங்கையில் பாதுகாப்புப் படையினர் தமிழ் சிவிலியன்கள்மீது தொடர்ந்து நடத்தும் தாக்குதல்கள் குறித்தும், இலங்கை அரசின் நகல் திட்டம் குறித்தும் இப்பேச்சுவார்த்தைகளின் போது கூட்டணி விவாதிக்கும்.

அதன் பிறகுதான் இலங்கை அரசின் யோசனைகளுக்கு மாற்று யோசனைகள் சமர்ப்பிப்பது பற்றி கூட்டணி முடிவு செய்யும்.

இப்படி திரு. அமிர்தலிங்கம் யு. என். ஐ. செய்தி ஸ்தாபனத்திற்குத் தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கம் தலைமையில் திரு. எம். சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் புதுடில்லி சென்று திரு. பண்டாரியைச் சந்திப்பர்.

# இலங்கை அரசுடன் பேச்சு நடத்தவேண்டிய அவசியமில்லை

## ஈ- தே. வி. முன்னணி அறிவிப்பு

சென்னை, டிச. 1

தமிழர் விடுதலைக் கூட்டணி விருப்பப்பட்டால் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தலாம்.

ஆனல் கூட்டணியோ, வேறு எந்த அமைப்புக்களோ ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் சார்பில் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியம் இல்லை.

இப்படி ஈழம் தேசிய விடுதலை முன்னணிப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி வாயிலாக இலங்கை அரசுடன் பேச்சு நடத்த ஈழம் தேசிய விடுதலை முன்னணி விரும்புவதாக இலங்கையில் இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதுபற்றிக் கேட்கப்பட்டபோது ஈழம் தேசிய விடுதலை முன்னணிப் பிரதிநிதி சொன்னதாவது:

இந்தியாவின் சமாதான முயற்சிக்கு நாம் இடையூறாக இருக்கமாட்டோம்.

எந்த ஒரு குழுவும் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றியும் ஈழம் தேசிய விடுதலை முன்னணி தனது விருப்பத்தை வெளியிடாது.

பேச்சுவார்த்தைகளின் போது இலங்கை அரசு தெரிவித்த யோசனைகளை முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை.

மாற்று யோசனை எதையும் முன்னணி சமர்ப்பிக்கப் போவதும் இல்லை என்று முன்னணி தெட்டத் தெளிவாக இந்திய அரசிடம் கூறிவிட்டது.

மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்க நாம் முயற்சித்தால் அது எம்மைப் பலவீனப்படுத்துவதாக அமையும்.

யுத்த நிறுத்தத்தை மீறி இலங்கை அரசு செயல்படுகின்றது. இந்த நிலையில் இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதை முன்னணி எதிர்க்கின்றது.

இப்படி முன்னணிப் பிரதிநிதி சொன்னுர்.

முச்சந்தி முரளி



ஐ.நா. வந்தால் என்ன, ஆட்டுக்குட்டி வந்தால் என்ன, ஸ்ரீலங்கா அரசாங்கத்தின்ரை முழுப் பூசனிக்காயைசோற்றிலை மறைக்கிற பிரசாரக் கலையை மிஞ்சி எதுவும்செய்ய முடியாது பாருங்கோ!

## சுபநேரம்

1-12-1985

சுபநேரம்: 9.15 முதல் 10.15 வரை
ராகுகாலம்: 4.45 முதல் 6.15 வரை

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மனோரமா ஏன் நடிக்கிறார்?

நான் பணத்திற்காகவே சினிமாவில் நடிக்கிறேன். ஏனென்றால் சினிமாக்காரர்கள் ஏதேனும்பொருள்கள்வாங்கச் சென்றால், மற்றவர்களை விடஇரண்டுபங்கு மூன்று பங்கு அதிகவிலைகொடுக்க வேண்டி இருக்கிறது.

அதைக் கண்டித்துக் கேட்டால், "இந்த விலை கொடுக்க, உங்களுக்கு என்ன குறைச்சல்?" என்கிறார்கள்.

அதனால் போலி கௌரவத்திற்காக பணத் தேவையை முக்கியமாகக் கருதியே சினிமாவில் நடிக்க வேண்டி இருக்கிறது—இப்படிக் கூறுபவர் மனோரமா.

### ரேகாவின் வீட்டிற்கு கல் வீச்சு!

நடிகை ரேகாவின் பங்களாவில் இரவு நேரத்தில் கல்வெறி, போத்தல் வீச்சு நடக்கிறதாம். அவருடைய ரசிகர்களின் அன்புத் தொல்லைதான் இது.

இரவு நேரத்தில் மது போதையில் வந்து "கனவுக் கன்னி ரேகாவே வெளியே வா" என்று கூச்சலிடுகிறார்கள். "ரேகா இல்லை" என்று கூறினால் உடனே கல்லை எறிந்து கண்ணாடியை நொறுக்குகிறார்களாம் அந்த அன்பு ரசிகர்கள். இவர்கள் தொல்லைதான் என்னே!

தினசரி சினிமா

### மோகன் - ரேகா இணைகிறார்கள்

பிரபல தெலுங்குப் படவுலக டைரக்டர் கே. விஸ்வநாத் தயாரிக்கும் தெலுங்கு படத்தில் மோகன் கதாநாயகனை நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக பிரபல ஹிந்தி நடிகை ரேகா ஒப்பந்தமாகியுள்ளார்.

மிகப்பிரமாண்டமாக உருவாக இருக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் ஆரம்பமாகிறது.

# ஜப்பானிய பயணம் முழு வெற்றி

## உருப்படியான நன்மை கிடைக்கும் என்கிறார் ராஜீவ்

புதுடில்லி, நவ. 30

எனது ஜப்பானிய விஜயம் முழு வெற்றியளித்துள்ளது. பயனுள்ள இந்தப் பயணத்தால் உருப்படியான நன்மைகள் பல எமது இரு நாடுகளுக்கும் எதிர்காலத்தில் கிடைக்கும் என ராஜீவ்காந்தி தெரிவித்தார்.

டோக்கியோவிலிருந்து அவர் புறப்படுமுன் பத்திரிகையாளர் மத்தியில் நேற்றுக்காலை பேசும் போதே மேற்கண்டவாறு அவரால் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; எமதுநாடுகளுக்கிடையேயான நட்பு புதியதொரு அத்தியாயத்தை இப்பொழுது உருவாக்கியுள்ளது.

எமக்கிடையே நெடுங்காலமாக இருந்து வரும் கலாசாரத் தொடர்புகள் மேலும் விரிவடைய இதனால் வாய்ப்பேற்பட்டுள்ளது.

ஜப்பான் பிரதமர் நாகசோனேயுடனான சந்திப்பு இரு நாடுகளதும் பொருளாதார அறிவியல் துறைப் பயன்களைப் பரஸ்பரம் பெருக்கிக் கொள்ள வழி செய்துள்ளது.

பலஉடன்படிக்கைகளை ஜப்பானுடன் பாரதம் ஏற்படுத்திக் கொண்டுள்ளமை ஆக்கபூர்வமானதாகும் என்றார்.



### காலை நக்கினார் அபராதம் 200 டாலர்

பிரிஸ்பேன், நவ. 30

இளம் பெண்ணின் காலை நக்கியவருக்கு 200 அமெரிக்க டாலர் அபராதம் விதிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் இச்சம்பவம் இடம்பெற்றது. வாரன் மார்ஸல் (வயது 22) கடை ஒன்றில் உதவியாளராகப் பணியாற்றினார்.

கலைவிழாவில் கலந்து கொண்ட இளம் பெண்ணின் காலை நக்கிய குற்றத்தை உள்ளூர் நீதிமன்றம் ஒன்றில் அவர் ஒப்புக்கொண்டார்.

"நான்கு கால்களில் நடந்துசென்று மனிதர்களைநக்குவது மிருகத்தின் செயல்தான்" என்று நீதிபதி தண்டனை விதிக்கும் போது கூறினார்.

## இராணுவ சட்டங்கள் பல நீக்கப்படும்

இஸ்லாமபாத் நவ. 30

பாகிஸ்தானில் நடைமுறையில் இருக்கும் பெரும்பாலான இராணுவச் சட்டங்கள் டிசம்பர் மாதம் நீக்கப்படும்.

எட்டரை வருடங்களாக அமுலில் இருந்த இராணுவ ஆட்சி விலக்கப்படுவதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை. இப்படி பாகிஸ்தான் நீதி, நாடாளுமன்ற விவகார அமைச்சர் இக்பால் அஹமத்கான் சொன்னார்.

இராணுவ ஆட்சியின் கீழ் பிறப்பிக்கப்பட்ட நான்கு சட்டங்களும் 7 அல்லது 9 சட்டவிதிகளுமே அமுலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

### சக்தியைப் பெற ஊன் உண்பவர்கள்

பர்மாவில் உள்ள ஷான் மாநில மலைக்குடி மக்களிடையே ஒரு நூதனமான பழக்கம் நிலவுகின்றது.

யுத்தத்திலே இறந்து போன எதிரிகளின் இருதயம், ஈரல் ஆகியவற்றின் பகுதிகளை உண்டார்களாம் இக்குடிமக்கள்.

இறந்து போனவர்களின் சக்தியை தாம் பெற்றுக்கொள்ள இது ஒரே வழி என்பது அவர்கள் கருத்து.

### பாம்பு....! விமானிக்கு உடம்பு உதறல்

ஜாகர்த்தா, நவ 30

விமானத்தினுள் மூன்று அடி நீளமான பாம்பு!

தனது காலடியில் பாம்பைக் கண்டு பயந்து போன விமானமோட்டி, அலறித் துடித்துக் கொண்டு விமானத்தை இறக்கி விட்டார்.

இந்தோனேஷியாவில் இச்சம்பவம் இடம் பெற்றதாக அன்டாரா செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

விமானத்தில் பாம்புகள் அடங்கிய பெட்டி ஒன்று கொண்டு போகப் பட்டது.

அந்தப்பெட்டிக்குள் இருந்த பாம்புகளில் ஒன்றே இப்படி நசுங்கிடாமல் வெளிவந்தது. எப்படியோ பாம்பு பிடிக்கப்பட்டு, பெட்டிக்குள் மீண்டும் போடப்பட்டது.

## இந்தியாவை பிளவுபடுத்த மேற்கத்திய உளவு பிரிவு முயற்சி

### 'டாஸ்' இப்படி சாடுகிறது

மாஸ்கோ, நவ. 30

இந்தியாவைப் பல வீனப்படுத்த மேற்கத்திய நாடுகளின் இரகசிய புலன் சேவைகள் சிக்கிய தீவிரவாதிகளுக்கு உலகம் முழுவதும் உதவுகின்றனர். இப்படி 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் குற்றஞ்சாட்டியது.

சமாதானம், அணி சேராமை ஆகியவற்றில் இருந்தும் இந்தியாவை விலக்கும் நோக்குடன் தான் மேற்கத்திய இரகசிய புலன் சேவைகள் தீவிரவாதிகளைஉற்சாகப் படுத்துகின்றன என்றும் 'டாஸ்' கூறியது.

தென் ஆசிய உபகண்டத்தில் ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்தி இந்தியாவை பயமுறுத்துவதே மேற்கத்திய இரகசிய சேவைகளின் நோக்கம் என்று 'டாஸ்' மேலும் குற்றஞ்சாட்டியது.

### பிரபுவின் ஏலம்போன பட்டங்கள்

லண்டன் நவ. 30

எலிஸபெத் மகாராணியாரின் மைத்துனர் ஒருவர் தனது நான்கு 'பட்டங்களை' 4 லட்சத்து 76 ஆயிரம் டாலர்களுக்கு ஏலத்தில் விற்றார்.

லிச்பீல்ட் பிரபு என்பவரே இப்படிச் செய்தார்.

விற்பனைக்கு வந்த 'பட்டங்க'ளில் 'மனோர்ஸ் பிரபு' பட்டமும் ஒன்று. வெளிநாட்டவர்கள் தான் இப் பட்டங்களை வாங்கினர்.

## வெளி உலகில்

## இஸ்ரவேல் பிரதமருக்கு எம்மிடமிருந்து அழைப்பா?

### மொரோக்கோ மறுப்பு

ரபட், நவ. 30

மொரோக்கோவிற்கு விஜயம் செய்யும்படி இஸ்ரவேல் பிரதமருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை.

இப்படி மொரோக்கோ அறிவித்தது.

அப்படி அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது என்ற செய்தியையும் மொரோக்கோ மறுத்தது

பேட்டி ஒன்றில் மொரோக்கோ மன்னர் ஹஸன் சொன்னதாவது:

இஸ்ரவேல் துருப்புகள் வாபஸாக வேண்டும். பலஸ்தீனியரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும். இவை பற்றி ஆராய தயாரென்றால்தான் இஸ்ரவேல்பிரதமர் என்னைச் சந்திக்கலாம்.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு எதுவும் இஸ்ரவேலிடம் இருந்தால், அவர் அதை ஒரு கடித உறையில் போட்டு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கலாம்.

## வன்செயல் தொடர்ந்தால்

## தென் ஆபிரிக்க துருப்புகள் ஸிம்பாப்வேயை முற்றுகை

### பிக் போத்தா எச்சரிக்கை

பிரிட்டோரியா, நவ. 30

கெரில்லாக்கள் தொடர்ந்து வன்செயல்களில் ஈடுபட்டால் ஸிம்பாப்வே நாட்டினுள் தென் ஆபிரிக்காவின் துருப்புக்கள் அனுப்பப்படும்.

தென் ஆபிரிக்கா வெளிநாட்டு அமைச்சர் திரு. பிக்போத்தா மேற்கண்டவாறு அறிவித்தார்.

தென் ஆபிரிக்க எல்லைக்குள் கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்து வன்செயல்களில் கெரில்லாக்கள் ஈடுபடுவதாகவும் தென் ஆபிரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது.

இது போன்ற வன்செயல்கள் இடம்பெறாத வண்ணம் பார்த்துக் கொள்ளும்படி ஸிம்பாப்வேஅரசாங்கம் கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் தென் ஆபிரிக்க அரசு கூறியுள்ளது.

### கீரிமலையில் சமய நெறி போட்டிகள்

காங்கேசன்துறை, டிச1

கீரிமலை சிவநெறிக் கழகம் யாழ் ஷ்ரூ யூனிக்கோ பிறைன்ஸ் லிமிட்டெட்டின் ஆதரவில் நடத்திய சமயத்துறை போட்டிகளில் ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலும் கோவில் மடங்களிலும் வீமன்காமம் மகாவித்தியாலயத்திலும் கடந்த 24-11-85 அன்று இப்போட்டிகள் நடைபெற்றன.

சைவசமய வினாடி வினாப்போட்டி, சிவத்தொண்டு, ஏடுஎழுதுதல், யோகாசனம், கோலம் போடுதல், மாலை கட்டுதல், போன்ற போட்டிகள் இதில் இடம்பெற்றன.

கீரிமலை சிவநெறிக் கழக செயலாளர் திரு. ச. விநாயகரத்தினம் பண்டிதர் இ. நமசிவாயம் ஆகியோர் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை மேற் கொண்டிருந்தனர்.

## அகதிகளுக்கு அன்பளிப்பு

திருநெல்வேலி, டிச. 1

கெற்பலி அகதிகள் குடியேற்றத் திட்ட வாசிகளுக்கு இலங்கை பனை அபிவிருத்திச் சபை தலைவர் திரு. கே. நடராசா சுமார் 3000 ரூபா பெறுமதியான பழமரக்கன்றுகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

1983 யூலை கலவரங்களால் இடம்பெயர்ந்து அகதிகளாகக் கைதடி அகதிகள் முகாமில் இருந்த சுமார் 450 பேரைக் கொண்ட 61குடும்பங்கள் கெற்பலி குடியேற்ற திட்டத்தில் குடியமர்த்தப் பட்டுள்ளன.

### ஆலாலு சிலைக்கு அடிக்கல்

நல்லூர், டிச. 1

மறைந்த கோப்பாய் முன்னாள் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரத்தின் உருவச் சிலைக்கான அடிக்கல் நடும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நல்லூர் சந்தைக்கு அருகாமையில் நடைபெறும்.

இதில் பிரபல அரசியல் பிரமுகர்களும் கூட்டணி உறுப்பினர்களும் கலந்துகொள்வர்.

## கல்வித் திணைக்கள ஆசிரியர், ஊழியருக்கு வெள்ள நிவாரணக் கடன்

கொக்குவில், டிச 1

அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும், கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும் வெள்ள நிவாரணக் கடன் வழங்குவதற்கு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இக்கடன் வழங்குவது சம்பந்தமாக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் சென்ற 27.11.85 ஆம் திகதி சுற்று நிருபம் ஒன்று கல்விப்பணிமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபரின் சுற்று நிருபத்தைத் தொடர்ந்து, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களினதும் ஊழியர்களினதும், விவரங்கள் தற்போது சேகரிக்கப்படுவதாகவும் இது தொடர்பான கடன் எவருக்கும் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### சமாதானசபை

வட்டுக்கோட்டை டிச.1

வட்டுக்கோட்டை கிழக்கு கிராம சேவை அலுவலர் பிரிவில் சமாதான சபைஅமைக்கப்படாதது குறித்து பொதுமக்கள் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

இச்சபையை உடனடியாக அமைக்குமாறு வட்டுக் கிழக்கு கிராம சேவை அலுவலரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### வெள்ள நிவாரணம்

வட்டுக்கோட்டை, டிச.1

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள் பற்றி கிராமங்கள் தோறும் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சமூக சேவைப் பகுதியினரின் ஆலோசனைப்படி கிராமசேவையாளர்கள் தமது பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகள் பற்றிய விபரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

சமூகசேவைப் பகுதி கிராமசேவையாளர், உதவி அரசாங்க அதிபர்களது சிபாரிசுக்கிணங்க பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்வழங்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈர நெஞ்சத்துடன் பொதுச் சேவை செய்வீர்

### டாக்டர் சுகந்தன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச 1

அயலவர் துன்பம் கண்டு துடிக்கும் இதயம் ஈரநெஞ்சம். அத்தகைய ஈரநெஞ்சத்துடன் நாம் பொதுச் சேவையில் ஈடுபட வேண்டும்.

இணுவில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை முதலுதவி சிகிச்சை நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த பிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி இவ்வாறு கூறினார்.

இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை அதிபர் திரு. செ. சோதிப்பெருமான் வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி மேலும் பேசுகையில், சான்றிதழ் பெறும் நோக்குடன் மட்டும் முதலுதவிப் படையில் எவரும் சேரக் கூடாது. சேவை செய்வதே உயிர் மூச்சாகக் கொண்டு இச்சேவையில் ஈடுபடுங்கள் என்றார்.

செல்வி. இ. வரதலட்சுமி வரவேற்புரை கூறினார். யாழ்ப்பாண பிரதம கல்வி அதிகாரி திரு. இ. சுந்தரலிங்கம் பங்குபற்றுநர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. க. தங்கவேலாயுதம், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. கணேசலிங்கம், திரு. நா. போஜன், திரு. தி. ச. சண்முகலிங்கம் ஆகியோரும் பேசினர்.

### பல்கலைக் கழகக் கல்லூரி மீண்டும் திறப்பு

மட்டக்களப்பு, டிச. 1

மட்டக்களப்பு பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்கள் இம் மாதம் 3-ஆம்திகதி ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து மூடப்பட்ட கல்லூரி மீண்டும் நாளை 2-ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள், புதிய மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் என்பன மீண்டும் தொடருமென கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

## வெளிவாரித் தேர்வை யாழ்ப்பாணத்தில் ஏன் நடத்த முடியாது?

### பரீட்சார்த்திகள் கண்டன மகஜர்

யாழ்ப்பாணம், டிச 1

பேராதனைப் பல்கலைக் கழகம் வெளிவாரித் தேர்வினை யாழ்ப்பாணத்தில் நடத்தாமையைக் கண்டித்துப் பரீட்சார்த்திகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து உள்ளனர்.

அவர்கள் தமது கண்டனத்தை மகஜர் மூலம் பேராதனைப் பல்கலைக் கழக உதவிப் பதிவாளருக்கு அனுப்பி வைத்து உள்ளனர்.

மகஜரில் பின்வருமாறு கூறப்பட்டு உள்ளது:

யாழ்ப்பாணம் ஒரு தேர்வு நிலையம் என்று விண்ணப்ப அறிவுறுத்தலில் அறிவிக்கப்பட்டு இருந்தது.

யாழ்ப்பாணத்தில் தேர்வு நடத்த நாட்டு நிலை சீராக இல்லை என்ற உங்கள் நிலையை நாம் புரிந்து கொள்கிறோம். ஆனால் இப்படியான சீரற்ற சூழலில் மாணவர்கள் பேராதனை அல்லது கொழும்புக்குச் சென்று எப்படித் தேர்வு எழுதமுடியும்

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத் துணை வேந்தர் தேர்வைப் பொறுப்பு ஏற்று நடத்த முன்வந்தார். கடந்த காலங்களில் யாழ் பல்கலைக் கழகம் இத்தேர்வைச் சிறப்பாக நடத்தி இருந்தது. இருப்பினும் இவ்வாண்டு அதை அனுமதிக்கப் பேராதனை பல்கலைக் கழகம் மறுத்து விட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

"தேர்வு நாடிகளுக்காகவே தேர்வு" என்ற தத்துவத்தை உணர்ந்து யாழ்ப்பாணத்தில் இத்தேர்வை நடத்தவும், இவ்வாறு அம் மகஜரில் வலியுறுத்தப்பட்டு உள்ளது.


வெற்றி எசன்ஸ் சப்ளையர்ஸ்

223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

1985 - கிறிஸ்மஸ் திருநாளைச் சிறப்புடன் கொண்டாட வேண்டுமா?
1986-புது வருடத்தைக் குதூகலமாக வரவேற்று மகிழவேண்டுமா?
உங்கள் எண்ணம் எம்மால் நிறைவேறட்டும்!

* றிச் கேக்
* பட்டர் கேக்
* கிறிஸ்மஸ் கேக்

எவ்வகையான கேக் வகைகளையும் தயாரிப்பதற்குத் தேவையான உள்நாட்டு, வெளிநாட்டு மூலப்பொருட்களை நாமே விற்பனை செய்து வருகிறோம்.

சிறப்பாகவும் சிக்கனமாகவும் உங்கள் கேக் வகைகளுக்குத் தேவையானவற்றைத் தாமதமின்றிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

T'Phone: 24823



**உதய சங்கற்பம்**

மேகத்தைக் காற்று கலைக்கின்றது. அதுபோல ஆண்டவனின் நாமம் உலகப்பற்று ஆகிய மேகத்தைக் கலைத்து விடும்.

-அன்னை சாரதாதேவி

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1-12-85 தொலை பேசி: 24805 22073 த.பெ. 23

## தமிழ் நோயாளிகளை சாகடிக்கத் திட்டமா?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ஸ்தம்பித்துப் போகும் நிலைக்கு வந்துவிட்டது. உயிர் ஆபத்துக்கு ஆளான ஒருவரைக் காப்பாற்ற முடியாத பயங்கர நிலைமை அங்கு தோன்றியிருக்கிறது.

மருந்து தொடக்கம் இரத்தம் வரைக்கும், டாக்டர்கள் முதல் தாதிமார் ஈருக, எக்ஸ்றே பிலிம் தொடக்கம் அம்புலன்ஸ் வரைக்கும் ஆளணி, உபகரண, பொருள் தட்டுப்பாடு அங்கு மோசமாகிவிட்டது.

பெரியாஸ்பத்திரியின் வைத்திய அத்தியட்சகர் அலற்லறப் பட்டியல் போட்டுக் கூறியிருக்கிறுர். ஆஸ்பத்திரியின் தேவைகளையும் பற்றுக்குறைகளையும் கொழும்பில் உள்ள மேலிடத்துக்கு அவர் பல தடவைகள் எடுத்துக் கூறியிருப்பார் என்பது நிச்சயம்.

நாளுக்கு நாள் நிலைமை மோசமாகி வருகிறதே தவிர சீரடைவதாகத் தெரியவில்லை. கொழும்பு மேலிடத்துக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைப் பற்றி அக்கறையில்லை என்பதையே இது காட்டுகிறது.

தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தியை அரசு முற்றாக மறந்துவிட்டது. அந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் இல்லை. தமிழர்கள், தமிழ்ப் பகுதிகள் என்றால், எது விஷயமானாலும் புறக்கணிப்பும், மாற்றாந்தாய் மனப்போக்கும், பாரபட்சமும்தான் வழக்கமானவை. அவ்வாறு நடந்து கொள்வதே அரசின் முக்கிய கொள்கையும் ஆகிவிட்டது.

தமிழர்களும் மனிதர்கள் என்ற எண்ணம் அரசாங்கத்துக்கு இருக்கிறதோ என்று சந்தேகப்பட வேண்டியதாகிவிட்டது. மனிதாபிமானம்தானும் அதற்கு இருக்கிறதா என்றும் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.

தமிழ் இனத்தையே அழித்து ஒழித்து விட வேண்டும் என்று அரசு எண்ணிவிட்டதா? தமிழர்களைப் பற்றியும் அவர்களது தேவைகள் குறித்தும் ஏன் அக்கறை காட்ட வேண்டும் என்றும் அரசு நினைக்கிறதோ?

தமிழ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க வசதி செய்யாமல் அவர்களைச் சாகடிப்பதும் அரசின் திட்டங்களில் ஒன்றா?

தமிழர்களும் இந்த நாட்டுப் பிரசைகளே. சிங்களவர்களுக்குச் செய்யப்படும் வசதி வாய்ப்புகள் யாவும் தமிழர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று அரசு உண்மையாகவே கருத வேண்டும்.

இல்லையெனில், தமிழர்களை ஆளவேண்டும் என்ற மோகம் எதற்கு? காலந்தான் பதில் சொல்லவேண்டும்.

# திருவருகைக் காலம் விடுக்கும் சவால்கள் என்ன?

## நம்மையும் மீட்டு, வாழும் சமுதாயத்தையும் மீட்போம்

மனித இனத்தின் அழிவு நெருங்கிவிட்டதா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் நிலையில் இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

இன்றைய அவல நிலையில் ஆண்டுதோறும் வரும் திருவருகைக் காலம் - நமக்கு விடுக்கும் சவால்கள் என்ன?

**அகதியான ஆண்டவன்**

கிறிஸ்து பேரோடும் புகழோடும் பிறக்கவில்லை மாடி மெத்தையில் தவழவில்லை. அதிகாரத்தோடு அவதரிக்கவில்லை. விடுதிகளில்கூட இடமில்லாமல், பாவம் மாட்டுத் தொழுவத்தில் தாலாட்டுப் பெற்றவர்.

ஓர் அகதியாகவே அவதரித்தார். ஏன்? எதற்காக? இப்படி ஒரு கோலம் கொண்டார். எமக்கு இது ஒரு புரியாத புதிர்தான்.

அவரது அன்புச் சீடரொருவன்-புனிதசின்னப்பர் என்று பெயர். கொரிந்திய நாட்டு மக்களுக்கு எழுதிய தமது திருமுகத்தில் இப் புதிருக்கு விடைபகர்ந்தார்.

"அவர் செல்வம் மிக்கவராய் இருந்தும், அவருடைய ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி உங்களுக்காக ஏழையானார்"

ஏழைகளாகிய எங்களை ஏற்றிவிட அவர் ஏற்றுக்கொண்ட வறுமையின் கோலமிது. பாவிகளாகிய எம்மை விரர்களாக்க அவர் வரவழைத்துக்கொண்ட தாழ்மையின் உருவமிது.

**துன்பத்தையும் பகிர்வோம்**

நாம் வாழும் முறையும் வகையும் மாறவேண்டும் எமது பொருளாதார, அரசியல் அமைப்புகள் மாற வேண்டும். சிந்தனைக்கு ஒவ்வாத

ஞானக்கதிர்

கொள்கைகள் மாற வேண்டும். அடிப்படையில் எமது சிந்தனைகள், உள்ளங்கள், மனப்பான்மைகள், நோக்கங்கள் போக்குகள் மாறவேண்டும்.

"மதவழி நின்று செய்யும் வெறும் வழிபாடுகள் ஒருவனை என்றும் கிறிஸ்தவனுக்குவதில்லை. உலக வாழ்வின் மூலமாக கடவுளின் துன்பத்தில் கலந்து கொண்டு அத்துன்ப வாழ்வைப் பகிர்ந்து கொள்வதிலேயே கிறிஸ்தவ வாழ்வு உண்டு. ஏனெனில் உலக மக்களின் துன்பம்தான் இறைவனின் துன்பம்"

இவ்வாறு ஜேர்மன் நாட்டுத் தலைசிறந்த மறையியல் சிந்தனையாளர் சொல்லுகின்றுர்.

இந்த உண்மையைத்தான் திருவருகைக் காலம் ஆண்டு தோறும் நமக்கு எடுத்துரைக்கின்றது. இன்பமே உருவான இறைவன், மனிதனாகித் துன்பத்தை அரவணைத்தான்.

துன்பத்தில் தவழும் மனிதனுக்கு ஆறுதல் அளிக்க பிளவும் பிரிவும் கொண்ட வாழ்க்கையில் இருந்து எம்மை விடுவிக்க அவர் தாமே சிறை கொண்டார். நாம் நல்லெண்ணம் கொண்ட செயல்களைத் துணிச்சலாக செய்ய முன்வர வேண்டும்.

**வருகை தந்த விடிவு**

எத்தனையோ ஆண்டுகளாக காத்திருந்த மனித இனத்திற்கு அவரின் வருகை மகிழ்வளித்ததில் வியப்பேதுமில்லை.

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் கிறிஸ்துவின் வருகை விடிவெள்ளியாக இருந்தது. அவர் கொண்டு வந்த விடிவு அன்றோடு முடியவில்லை. இன்று வாழும் மக்களுக்கும் அந்த விடிவு ஏற்றதாக இருக்கவேண்டும்.

அன்பு பிறக்கும் பொழுது அங்கு அந்த விடிவு பிறக்கின்றது. உண்மை பிறக்கும்போது அங்கு அந்த விடிவு பிறக்கின்றது. நீதி தோன்றும்போது அங்கு அந்த விடிவு பிறக்கின்றது. சத்தியம் தழைக்கும்போது அங்கு அந்த விடிவு பிறக்கின்றது.

எனவே, கிறிஸ்துவின் பாதையிலே நாமும் நின்று உழைத்தால் நமக்கும் வாழ்வு உண்டு. மீட்பு உண்டு. இதுதான் திருவருகைக் காலம் நமக்கு விடுக்கும் சவால். இதை முன்வின்று ஏற்று நம்மையும் மீட்டு, நாம் வாழும் சமுதாயத்தையும் மீட்போம்.

-அருட்திரு எஸ். டேமியன் ஓ.எம்.ஐ. -

பொய்யாமொழி



இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம், அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வது இல்லை.

## அகதிகளுக்கு நன்கொடை

யாழ்ப்பாணம், டிச 1

வன்செயலால் பாதிப்படைந்து யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்துள்ள அகதிகளுக்கு உதவ அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 2லட்சத்து 44ஆயிரம்ரூபாவை நன்கொடையாக வழங்கி உள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் இத்தொகையை யாழ் அரசாங்க செயலகம் மூலம் வழங்கியது.

அகதிகளுக்கு பொருள்கள் வழங்க இத்தொகை செலவிடப்படும்.

## வாசகர் திருமுகம்

**உதயன் பணி உயரட்டும்!**

★★★★★★★★★★★★★

உதயனைக் கண்டவுடன்
உள்ளம் மகிழ்ந்து விட்டேன்
உச்சிமுதல் உள்ள தெல்லாம்
மெச்சிப் புகழ்ந்து சொல்வேன்.

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை
உரிய பிரார்த்தனை - பொய்யாமொழி
எண்ணம் மலரும் "எடிற்றோறியல்"
வண்ணம் எல்லாம் வடித்தெடுத்த

உதயனைக் கண்டவுடன்
உள்ளம் மகிழ்ந்து விட்டேன்
இதயம் குளிர அதை
எத்தனைபோ முறை படித்தேன்.

ஆசிரியன் – வைத்தியன் – வக்கீல்
அனைவரினும் சமுதாயம் உருவாக
உழைப்பவ னொருவனே 'எழுத்தாளன்'
உன்பணி வெற்றிபெற வாழ்த்திடுவோம்.

— ஜீவா-நாவுக்கரசன் —

## எமக்குள்ளே மோதலா?
### கண்டிக்கிறது தேசிய இராணுவம்

யாழ்ப்பாணம், டிச. 1

தமிழீழத்தினுள்ளே மனித உரிமைகள் மீறப்படுவதை தமிழீழ தேசிய இராணுவம் கண்டித்திருக்கிறது.

பிற்போக்குவாதிகளை தோற்கடிப்போம் என்ற தலைப்பில் அந்த இயக்கம் அறிக்கை ஒன்று விடுத்திருக்கிறது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ் தேசிய இனத்தின் மனித உரிமைகள் ஏகாதிபத்திய சிறீ லங்கா ஆட்சியினரால் நசுக்கப்படுகிறது. அதே போன்று எம்மவர்கள் சிலராலும் இங்கு மனித உரிமைகள் மீறப்படுவதை வன்மையாக கண்டிக்கிறோம்.

எம்மினத்தினுள்ளே மோதலை ஏற்படுத்தும் போக்கில் நடந்து கொள்ளும் பிற்போக்குத்தனத்தையும் கண்டிக்கிறோம்.

விடுதலை இயக்கத்தின் மாபெரும் சக்தி மக்களே எமது ஆயுதங்கள் அடிமைத் தளையிலிருந்து எமது விடுதலையை நிலைநாட்டவே பயன்படுத்த வேண்டும்.

பிற்போக்குவாதிகளின் கையிலிருந்தும் மக்கள் விரோதிகளிடமிருந்தும் தமிழீழ விடுதலைப்பாதையை முற்போக்குவாதிகள் காப்பாற்ற வேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## படுகொலை பற்றி கருணாநிதி

சென்னை, டிச. 1

இலங்கையில் தமிழர்கள் படுகொலை தொடர்கின்றது.

இது அங்கு கண்காணிப்புக் குழு சரிவர இயங்குகின்றதா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இப்படி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கூறினார்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# வானத்திலிருந்து வந்த சூடு தலையை துளைத்துச் சென்றது

### குருமண்வெளி வாவியில் சடலங்கள்

மண்டூர், டிச 1

மண்டூர் குருமண்வெளி ஆகியவற்றுக்கு இடைப்பட்ட வாவியை கடந்து கொண்டிருக்கையில் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்களில் 16 பேரின் சடலங்கள் வெள்ளியன்று தேடிக் கண்டுபிடிக்கப்பட்டன.

மேலும் பல சடலங்களைக் கண்டுபிடிப்பதற்காக பொதுமக்கள் தொடர்ந்து வாவியில் தேடுதல் நடத்திவருகிறுர்கள்.

கண்டுபிடிக்கப்பட்ட பல சடலங்களில் தலைகளினூடாக குண்டுகள் துளைத்துச் சென்றிருந்தன.

கொலையுண்டவர்கள் மீது ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கண்டுபிடிக்கப்பட்ட சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

என். செல்வராஜா (வயது 30) கே. வேலுப்பிள்ளை (வயது 34), க. பாலசுந்தரம் (வயது 32) க. பீமசேனன் (வயது35) வி. தர்மலிங்கம் (வயது 36), சி. வசந்தராஜா (வயது 32), பி. சிவராஜா (வயது 22), பி. கணேசபிள்ளை (வயது 28), செ. பேரின்பம் (வயது35) கே. நேசராஜா (வயது 28), வேலு மோகராஜா (வயது 16), செ. தங்கராஜா (வயது 22), கே. அருணானந்தம் (வயது20) ம. தங்கராஜா (வயது28), க. கோபாலகிருஷ்ணன் (வயது 22) வி. கணேசபிள்ளை (வயது 30) ஆகியோரே இறந்த பதினறு பேருமாவர்.

இந்தப் பதினறு பேரும் கொல்லப்பட்டதால் முப்பதிற்கும் மேற்பட்ட சிறு குழந்தைகள் தங்கள் தந்தையரை இழந்திருக்கிறுர்கள்.

அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட மண்டூர் சம்பவம் பற்றி மட்டக்களப்பு பிரஜைகள் குழு ஜனதிபதியிடமும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடமும் முறையிடு செய்ய ஏற்பாடு செய்து வருகிறது.

## தற்கொலை

காங்கேசன்துறை, டிச. 1

வெளிநாட்டில் தொழில் புரியும் கணவரிடமிருந்து பணமும் கடிதமும் உரிய நேரத்தில் கிடைக்காததால் கடன் தொல்லை அதிகரித்தது. மனமுடைந்த மனைவி நஞ்சருந்தி உயிரைப் போக்கிக்கொண்டார்.

மயிலிட்டியைச் சேர்ந்த ஸ்ரீரஞ்சன் மகேந்திரராணி என்பவரே இறந்தவர் ஆவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. சா. தம்பிராசா விசாரணை நடத்தினார்.

## கிளிநொச்சி இளைஞர்களை விடுவிக்க பிரஜைகள்குழு முயற்சி

### யாழ். கோட்டை முகாமில் சந்திப்பு

உருத்திரபுரம், டிச 1

ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டுயாழ் கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கிளிநொச்சிப் பகுதி இளைஞர்கள் சம்பந்தப்பட்ட விசாரணையை துரிதப்படுத்தி நிரபராதிகளை விரைவில் விடுதலை செய்ய ஆவன செய்வேன்.

தம்மை யாழ். கோட்டையில் சந்தித்த கிளிநொச்சி பிரஜைகள் குழுவுக்குகேணல் கெருனுகுலதுங்கா மேற்கண்டவாறு வாக்குறுதி அளித்தார்.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவில் அதன் தலைவர் டாக்டர் கே. சுப்பையா, செயலாளர் சட்டத்தரணி ரி. ஸ்ரீஸ்கந்தராசா, பொருளாளர் ரி. எஸ். தர்மலிங்கம், உப தலைவர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி, உப செயலாளர் டாக்டர் ஏ. தாமோதரம்பிள்ளை, உப பொருளாளர் எஸ். சாந்தலிங்கம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

வெள்ளிக்கிழமை யாழ் கோட்டை இராணுவ முகாமுக்குச் சென்று உயர் அதிகாரிகளான கேணல் கெருனுகுலதுங்கா, லெப்டினன்ட் உடுகம்பல ஆகியோரைச் சந்தித்து கிளிநொச்சிப் பகுதியிலுள்ள பாரதிபுரம், திருநகர், தர்மபுரம், விசுவமடு ஆகிய இடங்களில் கைதாகி யாழ் கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 24 இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இச்சந்திப்பின்போது இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்ததாவது:-

சில தீவிரவாத இளைஞர்கள் செய்யும் தவறினுல் அப்பாவி இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதனுல் அவ் இளைஞர்களின் பெற்றோரும், உற்றாரும் கூடக் கவலை அடைகின்றனர்.

இளைஞர்களைக் கைது செய்வதினுலோ சுட்டுக் கொல்லதினுலோ நாம் மகிழ்ச்சி அடையப்போவதில்லை.

இளைஞர்கள் எம்மைத் தாக்க முற்படும்போது தான் நாங்கள் அவர்களைத் திருப்பித் தாக்க முற்படுகிறோம்.

ஆதலால் பிரஜைகள் குழுவினராகிய நீங்கள் இளைஞர்களுக்குப் புத்திமதி கூறித் தாக்குதல்களை நிறுத்த ஆவன செய்யுங்கள்.

தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் நாம் அறிவோம்.

ஆதலால் அதைத் தீர்ப்பதற்கு ஆயுதப்போராட்டம் தான் ஒரே வழி என நினைப்பது தவறு. வேறு வழிகளில் பிரச்சினையைத் தீர்க்க ஆவன செய்யும்படி இளைஞர்களுக்குப் புத்திமதி கூறுங்கள் - இவ்வாறு இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்சந்திப்பு சுமார் அரை மணி நேரம் நடந்தது.

## வடக்கில் வெள்ள நிவாரணம்

### சமூக சேவைப் பகுதி நடவடிக்கை

கொக்குவில் டிச 1

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினுல், வீடுகளை முற்றாக இழந்தவர்களுக்கும், சிறு சேதங்களுக்கு உள்ளானவர்களுக்கும் நிவாரணம் கிடைக்கும்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் சமூக சேவைப்பகுதி மேற்கொண்டு வருவதாக சமூக சேவைப் பகுதி ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களினுல் சேகரிக்கப்பட்ட விபரங்களின்படி சுமார் 8000 வீடுகள் அழிந்திருக்கலாம் என்று தெரிவித்தார் ஆணையாளர்.

பாதிக்கப்பட்ட சுமார் பத்தாயிரம் குடும்பங்களுக்கு ஒரு வார காலத்துக்குரிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவரால் தெரிவிக்கப்பட்டது.

## பருத்தித்துறையில் கொடி தினம்

பருத்தித்துறை, டிச 1

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை அபிவிருத்திக்கென, வடமராட்சிப்பகுதியில் ஒரு வாரகாலத்துக்கு கொடி தினம் கொண்டாடப்படவுள்ளது.

இவ் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

இன்று முதல் 7 ஆம் திகதி வரை கொண்டாடப்படும் கொடி தினத்தின்போது வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகள், அரசாங்க திணைக்களங்கள், தனியார் வர்த்தக நிறுவனங்கள், பஸ் தரிப்புநிலையங்கள், ஏனைய பொது இடங்கள் ஆகியவற்றில்வைத்துகொடிகள் விற்பனை செய்யப்படும்.

## இந்தியா கையெழுத்திடாது

ஜப்பான், நவ. 30

அணுஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்து இடாது.

அந்த ஒப்பந்தம் பாரபட்சமானது.

இப்படி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி ஜப்பானில் செய்தியாளர் மாநாட்டில் சொன்னுர்.

இந்தியாவிடம் அணுகுண்டு தயாரிக்கும் ஆற்றல் உண்டு. ஆனுல் தயாரிக்கும் எண்ணம் கிடையாது.

இப்படி பிரதமர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்தார்.

## ஆக்கப்பணிகளில் இளைஞரின் ஈடுபாடு தொடர வேண்டும்

### கண்காட்சியில் கருத்துரை

காங்கேசன்துறை, டிச. 1

இன்றைய இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி பெரிதும் பாராட்டுக்கு உரியது. ஆக்கப் பணிகளில் அவர்களின் ஈடுபாடு மேலும் தொடர வேண்டும்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூர் உற்பத்திப்பொருள்களை ஊக்குவிக்குமுகமாகவும் அறிமுகம் செய்யுமுகமாகவும் கன்னுகம் வாணி கல்வி நிலையத்தினர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கண்காட்சி ஒன்றை நடத்தினர்.

வாணி கல்வி நிலைய அதிபர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சியை யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி திரு. எஸ். பாலகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து எமது தேவைகளை நாமே நிறைவேற்றிக் கொள்ளும் ஆர்வம் எமது மக்கள் மத்தியில் பல வருடங்களாக இருந்து வந்தது.

அந்த ஆர்வம் இன்று இளைஞர்களின் முயற்சியால் செயற்பட ஆரம்பித்துள்ளது பாராட்டுதற்குரியது.

அதுபோன்று நாமும் இன்னல்களுக்குள்ளாகியுள்ள போதும்முன்னேற வேண்டும் என்ற துடிப்புடன் செயலாற்றவேண்டும். இப்படி அவர் கூறினுர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி திரு. எஸ். பாலகிருஷ்ணன் பேசுகையில், இன்றைய சூழ்நிலையில் எமது பிரதேசம் சீர்குலைந்துள்ளபோதும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் இந்த முயற்சிகள் துணிகரமான செயலாகும்.

எமது பிரதேசத்தையும், பிரதேச மூல வளங்களையும் அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி முயற்சிகள் பெரிதும் பாராட்டுதற்குரியன என்றுர்.

ஐஸ்கிறீம், கேக் வகைகள், பழரச
பானங்கள் இவைகளைச் சுவை குன்றாமல்
தயாரிப்பதற்குத் தேவையான மூலப்
பொருட்கள் யாவற்றையும்
பெற்றுக்கொள்ள
✶
அபிராமி எசன்ஸ் றேட்ஸ்
31, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(காரைநகர் மினி பஸ் நிலைய முன்பாக)

# உதயன்

1 – 12 – 1985

HYCO, YEAST, பேக்கிங் பவுடர், மில்க
பவுடர், ஐசிங் சுகர், GOLDEN SYRUP,
சஜு, பிளம்ஸ் யாவற்றையும்
தட்டுப்பாடின்றி
விற்பனை செய்பவர்கள்
✶
ஐடியல் ஏஜென்ஸி
267 B, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T'Phone: 23649

# சரக்கு ரயிலில் போன சிமெந்து அபகரிப்பு

## புளியங்குளத்தில் சம்பவம்

### 2 வாகனங்களில் ஏற்றிச் சென்றனர்

யாழ்ப்பாணம், டிச. 1
சிமெந்து ஏற்றிச் சென்ற சரக்கு ரயில் புளியங்குளத்தில் கொள்ளையிடப்பட்டது.

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து அநுராதபுரம் சென்ற ரயிலில் இச் சிமெந்து அனுப்பப்பட்டது.

மாலை புளியங்குளத்திற்கு ரயில் வந்தது. ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் திடீர் என்று உள்ளே புகுந்து ரயில் நிலையஅதிபரைக் கட்டிப் போட்டனர்.

பின்னர் பெட்டிகளில் இருந்து 260 பை சிமெந்தை இரண்டு வாகனங்களில் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

## காட்டு நரிகள் தாக்கி சிறுமி காயம்

கிளிநொச்சி, டிச. 1
காட்டு நரிகள் கடித்த பெண்குழந்தை ஒன்றும் கட்டுத் துவக்கு கையில் பாய்ந்ததால் குடும்பஸ்தர் ஒருவரும் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் அவசர சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.

அம்பலப்பெருமாள் குளத்தைச் சேர்ந்த கதிரவேலு இராமையா(வயது 37) என்பவரே கட்டுத் துவக்கினுல் காயம் அடைந்தார். தனது வீட்டுக்கு அண்மையிலுள்ள காணியொன்றில் சோயா பயிரிட காணி துப்புரவு செய்த சமயம் எவரோ வைத்த கட்டுத் துவக்கு இவரது கையில் பாய்ந்தது.

கல்மடுக் குளத்தைச் சேர்ந்த அ. செல்வி என்னும் ஆறு வயதுச் சிறுமியே கடைக்குப் புறப்பட்ட சமயம் காட்டு நரிகளால் தாக்கப்பட்டார்.

## அகதிகளுக்கு தொடர்ந்து நிவாரண உதவி கோரி தீர்மானம்

நல்லூர், டிச 1
யாழ்ப்பாணத்தில் தஞ்சம் அடைந்துள்ள தமிழ் அகதிகளுக்கு தொடர்ந்து நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

இப்படி தமிழ் மகளிர் அவை ·டத்திய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அகதிகளுக்கு வழங்கப்படும் சகல நிவாரண உதவிகளும் எக்காரணம் கொண்டும் நிறுத்தப்படக்கூடாது. தொடர்ந்து வழங்கப்படுவதற்குரிய நடவடிக்கைகளை யாழ் அரசாங்க அதிபர் எடுக்க வேண்டும்.

அதற்கு உதவி அரச அதிபர்களும் கிராமசேவையாளர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இடம் பெயர்ந்து வந்து உள்ள அரச ஊழியர்கள், சொந்த இடங்களில் பழைய நிலைமை திரும்பும் வரை, யாழ்ப்பாணத்தில் தொழில் புரிய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

இடம்பெயர்ந்து வந்துள்ள மாணவர், யாழ்ப்பாணத்தில் கல்வியைத் தொடர அனுமதிக்க வேண்டும். உயிர், உடைமைகளைப் பறிகொடுத்தவர்களுக்கு அரசு பூரண நஷ்டஈடு வழங்க வேண்டும். எரிக்கப்பட்ட விடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## வடபகுதி பொலிஸாருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 1
வடபகுதி பொலிஸாருக்கு மீண்டும் இடமாற்றம் காத்திருக்கின்றது என்று அறியப்படுகின்றது.

சிலமாதங்களுக்கு முன்னர் யாழ். பொலிஸைச் சேர்ந்த 86 பேருக்கு இடமாற்ற உத்தரவுகள் வந்தன.

பின்னர் அவை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டன.

மீண்டும் அந்த 86 பொலிஸாருக்கும் இடமாற்ற உத்தரவுகள் வரவுள்ளனவாம்.

## இளைஞர் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், டிச 1
''இனப் பிரச்சினைக்கு உங்கள் தீர்வு'' என்ற தலைப்பில் இளைஞர்களுக்கான கட்டுரைப் போட்டி நடத்தப்பட உள்ளது.

நாளை 2ஆம் திகதி நடைபெறவுள்ள இப் போட்டி தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் நடைபெறும்.

16 வயது தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் போட்டியில் பங்குபெறலாம்.

இலங்கை வை. எம். சி.ஏ. தேசிய கவுன்சிலின் சமாதானம் அமைதிக்கான கமிட்டியின்ஆதரவில் இக்கட்டுரைப் போட்டி நடைபெற உள்ளது.

யாழ் வை. எம். சி. ஏ. பொதுச்செயலாளர் திரு ஜே. என். பொன்னையா இப் போட்டிகளுக்குப் பொறுப்பாக உள்ளார்.

## தர்மபுரத்தில் கைதானவர்களில் பெண்கள் விடுதலை

உருத்திரபுரம், டிச. 30
புதன்கிழமை காலை தர்மபுரத்தில் கைது செய்யப்பட்ட நால்வரில் இரு பெண்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களோடு அன்று கைது செய்யப்பட்ட ஏனைய இரு இளைஞர்களும் விசாரணைக்காக ஆனையிறவு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அன்று கைப்பற்றப்பட்ட லொறி ஒன்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

தர்மபுரத்தைச் சேர்ந்த முருகேசு அரசம்மா (50வயது), அவரது பேத்தி முத்தையா முகாஜினி (20 வயது) ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

லொறிச் சாரதி ரங்கநாதன் என்பவரும் மற்றொருவருமே விசாரணைக்காகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் தலைவர் டாக்டர் கே. சுப்பையா, பொருளாளர் ரி. எஸ். தர்மசிங்கம், உபதலைவர் டாக்டர் கே. வி. கே. திரிலோகமூர்த்தி, உப செயலாளர் டாக்டர்.ஏ. ஏ. தாமோதரம் பிள்ளை உபபொருள்ளாளர் எஸ். சாந்தலிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களின் சார்பில் ஆனையிறவு இராணுவ முகாமுக்குச் சென்றனர்.

இதனை அடுத்தே மேற்கண்ட இரு பெண்களும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

# விளையாட்டரங்கு

லீக் சுற்றுப் போட்டி

## ஆட்டத்தில் கைகலப்பு!

### குழப்ப நிலை சமாளிக்கப்பட்டது

விளையாட்டுச் செய்தியாளர்:- சண். ஜோன்சன்.

யாழ்ப்பாணம், டிச.1
கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்திற்கும் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டி கைகலப்பு காரணமாக இடையில் குழம்பியது.

எனினும் ஒருவாறு நிலைமை சுமுகமாக்கப் பட்டு ஆட்டம் நடைபெற்று முடிந்தது.

யாழ். உதைபந்தாட்ட சங்கம் நடத்தும் 7 பேர் கொண்ட, ''லீக்'' முறை சுற்றுப் போட்டியிலேயே இந்த மோதல் இடம் பெற்றது.

இந்த ஆட்டம் நேற்று அரியாலை சன சமூக மைதானத்தில் நடைபெற்றது. ஆட்ட நடுவில் இரு வீரர்களுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதனை அடுத்து ரசிகர்களும் மைதானத்தில் இறங்கினர். மோதல் வலுத்தது.

எனினும் ஏற்பாட்டாளர்கள் தலையிட்டு நிலைமையை ஒருவாறு சமாளித்தனர். ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

ஆட்ட முடிவில் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் இரண்டுக்கு ஒன்று என்ற கோல் அடிப்படையில் வெற்றிவாகை சூடியது.

இதற்கு முன்னதாக நடைபெற்ற இரு ''பி'' பிரிவு ஆட்டங்களும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றன.

பாடும் மீன், சென். நீக்கலஸ் அணிகளுக்கு இடையிலான மோதலில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.

மற்றைய ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணி சென். மேரிஸ் வெள்ளை அணி ஆகியவை தலா இரண்டு கோல் களைப் போட்டன.

இன்று நடைபெறும் ''ஏ'' பிரிவு ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் நேரடி மோதலில் இறங்குகின்றன.

''பி'' பிரிவு ஆட்டத்தில் அல்லைப்பிட்டி அணியை எதிர்த்து புனிதவளன் அணி ஆடும் மற்றொரு போட்டியில் வைக்கிங்ஸ் அணியுடன் சென். மேரிஸ் நீல அணி மோதுகிறது.

இப்போட்டிகள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

இரண்டாவது டெஸ்ட்

## முதல் இன்னிங்ஸில் ஆஸி. அணி சுருண்டது

### ஹட்லி அபார பந்து வீச்சு!

பேர்த், டிச. 1
நியூஸிலாந்திற்கு எதிரான மூன்ருவது (இறுதி) கிரிக்கெட்டெஸ்ட்ஆட்டத்தில்ஆஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 203 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்த ஆட்டம் நேற்று சனிக்கிழமை ஆஸ்திரேலியா பேர்த்தில் ஆரம்பமானது.

ஆட்ட ஆரம்பத்தில் பூவா தலையா சுண்டிப் பார்த்ததில்நியூஸிலாந்து அணித் தலைவர் ஜெர்மி கோனி வெற்றிபெற்ருர். அவர் ஆஸ்திரேலிய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அனுமதித்தார்.

நியூஸிலாந்து பந்து வீச்சாளர் ரிச்சர்ட் ஹட்லியின் அபார பந்து வீச்சுக்கு ஆஸ்திரேலிய அணி ஈடுகொடுக்க முடியாது திணறியது. அவர் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

203 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் ஆஸ்திரேலிய அணி தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. வெயின்ஸ் பிலிப் 37, மத்தியூஸ் 34, மக்டேமட் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

தொடர்ந்து ஆட்ட இறுதி வரை துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி விக்கேட் இழப்பு ஏதுமின்றி 8 ஓட்டங்களைப் பெற்றது.

பிரபாகரன் பத்திரிகைகளுக்கு அறிக்கை

# தனிநாடே பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

சென்னை, டிச. 1
சுதந்திர இறைமையுள்ள தனி நாடு அமைப்பதே எமது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஆகும். எமது தாய் நாட்டை மீட்டு சுதந்திர நாட்டை அமைக்க நாம் தொடர்ந்து போராடுவோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு விடுத்த எழுத்து மூல அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ் ஈழம் தவிர்ந்த வேறு எந்த மாற்றீடும் எமது பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என நாம் நினைக்கவில்லை. எங்கள் அடக்கப்பட்ட மக்களின் இந்தப் போராட்டத்துக்கு இந்தியா இறுதியான ஆதரவு நல்குமென நாம் எதிர்பார்க்கிறோம். எமது சுயநிர்ணய உரிமையை இந்திய மக்கள் அங்கீகரிக்க காலம் எடுக்கலாம். ஆனாலும் அப்படியான அங்கீகாரத்துக்காக நாம் இடைவிடாது போராடுவோம்.

இலங்கை அரசாங்கம் இந்தியப் பிரதமரின் நல்லெண்ணத்தையும் நல் ஆர்வத்தையும் வரவேற்பதுபோல் நடிக்கின்றது. இனப் பிரச்சினைத் தீர்வுக்கு கணிசமான பிரேரணையை முன்வைக்காத இன்மூலம் இந்தியப் பிரதமரின் நல்லெண்ணத்தை இலங்கை அரசு தகுந்த முறையில் பயன் படுத்தவில்லை.

தமிழ் போராளிகளைப் பற்றி இந்திய அரசுக்கு தப்பெண்ணம் ஏற்படுத்துவதே இலங்கை அரசின் நோக்கமாகும்.

எனினும் ஜெயவர்த்தன அரசின் ஒரு பகுதியான நம்பிக்கைத் துரோக முயற்சி குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எச்சரிக்கையாக இருக்கின்றது.

மேலும் இலங்கையின் கெட்ட நோக்கங்கள் குறித்து இந்தியா விரைவில் எச்சரிக்கையாக இருக்குமென புலிகள் இயக்கத்திற்குத் தெரிய வருகிறது. ஆயுதப் போராட்டமே தமிழ் மக்களின் இலட்சியத்தை வென்றெடுக்க ஒரே வழி.

## கல்லரியும் இயந்திரம் கிடைத்தது

நல்லூர், டிச. 1
அண்மையில் யாழ்ப்பாணத்தில் களவாடப்பட்ட கல்லரியும் இயந்திரம் திருப்பிக் கிடைத்தது.

சில இளைஞர்கள் இந்த விடயத்தில் தலையிட்டு இயந்திரத்தை மீட்டுக் கொடுத்தனர்.

யாழ்ப்பாணத்தில் பிரபல கட்டடம் ஒன்றை நிர்மாணித்துக்கொண்டிருக்கும் கம்பெனி ஒன்றுக்கு இவ் இயந்திரம் சொந்தமானது ஆகும்.

## உண்டியல் குலுக்குவது நிறுத்தப்படும்

நல்லூர், டிச. 2
தமிழ் அகதிகளுக்காக நாளாந்தம் உண்டியல் குலுக்குவதை நிறுத்தும்படி சகல அகதி முகாம் நிர்வாகிகளையும் இடம் பெயர்ந்தோர் மாநாடு கேட்டுள்ளது.

சில நாட்களில் மட்டுமே உண்டியல் குலுக்குவதை செயற்படுத்தும் படியும் மாநாடு கேட்டுள்ளது.

நாளாந்தம் உண்டியல் குலுக்குவது யாழ். மக்களுக்கு கௌரவக் குறைவை ஏற்படுத்துவதாக மாநாடு கருதுகின்றது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐக்கிய நாடுகள்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

தஞ்சம் புகுந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்கவேண்டும்.

✶ தமிழ்பேசும் மக்கள் இலங்கையில் அனுபவிக்கும் கொடுமைகள், அகதிகளாக மாறி படும் இன்னல்கள் பற்றி அறிந்துகொள்ள செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தொண்டர் நிறுவனங்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவேண்டும் என்று மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

✶ இலங்கையில் மிஞ்சியுள்ள தமிழ்பேசும் மக்களின் உயிர்களை உலக மக்களின் கைகளில் இம்மாநாடு ஒப்படைக்கின்றது.

✶ தமிழ் மக்களின் சுதந்திரமான அரசியல் உரிமைக்காகப் போராடி வரும் இயக்கங்கள் போராட்ட நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

தமிழ்மக்களின் அகதிநிலைக்கான காரணங்களை மிக நுண்ணியமாக ஆராய்ந்து தமிழ் மக்களின் பாதுகாப்பை முன்வைத்து செயல்பட வேண்டும் என்று மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

## நன்றி தெரிவித்து தீர்மானம்

நல்லூர், டிச 1
தமிழ் அகதிகளுக்கு உதவும் சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள், யாழ்ப்பாண மக்கள் அரசு அதிகாரிகள் அனைவருக்கும் இடம் பெயர்ந்தோர் மாநாட்டில் நன்றி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

# இன்றைய நிலைக்கு 1956 சாபக்கேடு

## காரணம் என்கிருர் பிரதமர்

கொழும்பு, டிச. 1
நாட்டின் இன்றைய அவலநிலைக்குக் காரணம், 1956 சாபக்கேடு தான்.

இப்படி பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாச குறிப்பிட்டார்.

கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலயத்தில் நிறுவப்பட்ட புதிய கட்டடம் ஒன்றை பிரதமர் திரு. பிரேமதாசா கடந்த வியாழக்கிழமை மாலை திறந்துவைத்தார்.

பின்னர் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. பிரேமதாசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

1956க்கு முன்னர் தமிழர்கள் விரும்பியே சிங்களம் கற்றனர்.

1956இல் தனிச் சிங்களச் சட்டம் வந்தது. தமிழர்கள் சிங்களம் படிக்கமாட்டோம் என்று சொல்லத்தொடங்கினர்.

விரும்பாத ஒன்றை குழந்தைக்கு ஊட்டமுடியுமா? அந்த நிலைமை தான் 1956க்குப் பின்னர் இலங்கையில்ஏற்பட்டது.

அதன் பலனைத்தான் இன்று நாம் அனுபவிக்கிறோம்.

நாம் படிக்கும் காலத்தில் இன, மத பேதம் கிடையாது. இன, மத ரீதியில் சிந்தித்ததும் கிடையாது. ஒரே இனம் என்ற ரீதியில் சிந்தித்தும் நடந்தும் வந்தோம். இப்படி பிரதமர் சொன்னர்.

# திருமலை அகதிகளுக்கு விசேஷ சலுகை வேண்டும்

நல்லூர், டிச.1
திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்தவர்கள். எனவே அவர்களின் பிரச்சினைகளை இந்த மாநாடு விசேஷ கவனத்திற்கு எடுத்து அவர்களுக்கு உரிய நிவாரண உதவிகளை வழங்கவேண்டும்.

யாழ் வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெற்ற இடம்பெயர்ந்தோரின் இறுதி மாநாட்டின் விசேஷ பிரதிநிதியாகக் கலந்து கொண்ட திருகோணமலை வை. எம். எச். ஏ. பிராந்திய செயலாளர் திரு. செ. சிலபாதசுந்தரம் இவ்வாறு கூறினுர்.

நேற்றைய மாநாட்டுக்கு திரு. தம்பிராசா நியூட்டன் தலைமை வகித்தார்.

## சாவகச்சேரி...

—1ம் பக்கத் தொடர்ச்சி

லாவை, கலஹா, கண்டி, ஹட்டன், தலவாக்கலை, நுவரெலியா ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்தோர் கெற்பலி என்னும் இடத்தில் வசிக்கிறுர்கள்.

அவர்களுக்குத் தொழில் வாய்ப்பு அளிக்கத் தும்புத் தொழிற்சாலை ஒன்றை பணம் பொருள் அபிவிருத்திச் சபை அமைக்க வேண்டுமென மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## தேவை

உதயன் — சஞ்சீவி பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு அனுபவமுள்ள அச்சுக்கோப்பாளர்கள் தேவை. ஆகக் குறைந்தது ஐந்து வருட முன் அனுபவம் அவசியம். பத்திரிகை அலுவலகங்களில் சேவையாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எழுத்துமூலம் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,
உதயன் — சஞ்சீவி பணிமனை,
15, 2 ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# லொறியில் சென்ற இராணுவ வீரர் துப்பாக்கிப் பிரயோகம்

## திருவையாறில் இரு இளைஞர்கள் பலி

கிளிநொச்சி டிச. 1
கிளிநொச்சி திருவையாறு மூன்றும் பகுதிக்குள் லொறி ஒன்றில் சென்ற இராணுவத்தினர் ஓர் இடத்தை முற்றுகையிட்ட சமயம் இரு இளைஞர்கள் கொல்லப் பட்டனர்.

வீட்டிலிருந்து ஒரு மோட்டார் சைக்கிள், அலுமினியப் பாத்திரங்கள் தொலைக் காட்சிப் பெட்டிகள் உட்பட பல பெறுமதியான பொருள்களும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன.

இறந்த இளைஞர்களின் சடலங்கள் கிளிநொச்சி முகாமில் வைக்கப்பட்டுள்ளன.

அந்ததினம் யாழ்தேவி மூலம் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சிவந்த இராணுவத்தினர் இரண்டு லொறிகளில் காட்டிக்கொடுப்போர் சகிதம் திருவையாறு கிராமத்துள் நுழைந்தனர்.

அச் சமயம் பல துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால் மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓட ஆரம்பித்தனர்.

பின்னர் மாலையானதும் கைப்பற்றப்பட்ட பொருள்களுடனும் இளைஞர்களுடனும் இராணுவத்தினர் ஆனையிறவு முகாமிற்குச் சென்றனர்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த - ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி: 1-12-1985